DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 201-2021**

**Deposition of Witness for Prosecution : P.W.18**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | டாக்டர். பாண்டியராஜ் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 30.10.2025

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்சமயம் நாகப்பட்டினம் ஒரத்தூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அறுவை சிகிச்சை பிரிவில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 28.03.2021ந் தேதி நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் அரசு மருத்துவராக பணியில் இருந்தபோது கீழ்வேளூர் காவல் நிலைய குற்ற எண் 248/2021 சட்டப்பிரிவு 174 சந்தேகத்துக்குரிய என்ற வழக்கில் 302ன் இ.த.ச.பிரிவின் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை அடிப்படையில் கீழ்வேளூர் காவல் நிலைய காவலர் 263 தியாகராஜன் என்பவர் நபர் பிரேதத்தை அடையாளம் காட்ட பிரேத பரிசோதனையை மதியம் 2.15 மணிக்கு தொடங்கினேன். பிரேதத்தை பரிசோதனை செய்தபோது பிண விறைப்பு தன்மை பிரேதத்தின் அனைத்து பகுதியிலும் காணப்பட்டது. முகமானது வெளிறி போய் இருந்தது. கண்பகுதியானது கன்றி காணப்பட்டது. வாயிலிருந்து உமிழ்நீர் வழிந்து காணப்பட்டது. நாக்கு வெளியில் தள்ளியிருந்தது. Ligature mark 24x2x0.2 cm அளவில் படுக்கையாக (horizontal) கழுத்தின்

முன்பகுதியில் தாவாகோட்டையின் 4cm கீழே காணப்பட்டது. அது வலது புறம் கழுத்தின் பின்பகுதி வரை காணப்பட்டது. Hyoid எலும்பு முறிவு காணப்பட்டது. வேறு எந்த வெளிப்புற காயங்களும் இல்லை. உடம்பின் உட்புறங்களான நெஞ்சுபகுதி, வயிற்றுபகுதி, தலைப்பகுதி அனைத்தும் இயல்பாக இருந்தது. கழுத்தில் இருந்த இரத்த குழாய் வீக்கமாக இருந்தது(congested). சுவாசக்குழாய் இயல்பாக இருந்தது. லிவர், கிட்னி, வயிறு, சிறுகுடல் இவை விசரா பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. எந்தவிதமான ஆல்கஹாலோ அல்லது விஷமோ இல்லை என்று விசரா அறிக்கை வரப்பட்டது. அந்த விசரா அறிக்கை கொடுத்தது காயத்ரி. அந்த விசரா அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் வழங்கிய சடல கூராய்வு அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கழுத்தை சுற்றி ஏற்பட்ட இறுக்கத்தின் காரணமாக அவர் இறந்திருக்கக்கூடும் என்று கருத்துரை எனது அறிக்கையில் தெரிவித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் சான்று பொருள் போர்வையால் நெறிக்கப்பட்டிருந்தால் இந்த காயம் ஏற்பட வாய்ப்பு இல்லை. என்னை இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சட்டம் சார்ந்த மருத்துவர் அல்ல என்றால் சரிதான். ஆய்வாளர் அவர்களால் பிரேதத்தின் மீது காணப்படும் ஆடைகள், காயங்கள் குறித்து 86 படிவம் என்னிடம் கொடுக்கப்படவில்லை. சடலத்தின் தொண்டை குழியில் ஆரம்பித்து மர்மஸ்தானம் வரை கிழித்து பிறகுதான் பிரேத பரிசோதனை செய்யப்படுகிறது என்றால் சரிதான். பிணவறையில் துப்புறவு பணியாளர்கள் மற்றும் எனக்கு உதவியாளர்களும் இருப்பார்கள் என்றால் சரிதான். போஸ்ட்மார்டம் Rough notes என்ற ஒரு புத்தகம் உள்ளது என்றால் சரிதான் அது பிணவறையில் காயங்கள் குறித்து குறிப்பு எழுதப்பட வேண்டும் என்றால் சரிதான். பின்னர் தான் அ.சா.ஆ.4 அறிக்கை தயார்

செய்யப்பட்டது என்றால் சரிதான். மேலே கூறிய நோட் ஆய்வாளருக்கு நகல் கொடுக்கவில்லை. வீடியோ கிராபி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரிதான். ஆனால் அப்படி எடுக்கப்படவில்லை போட்டோ எடுக்கப்பட்டது. ஆய்வாளர் கேட்கவில்லை கொடுக்கவில்லை. பிணவறையில் என்னுடைய உதவியாளர்களும், துப்புறவு பணியாளர்களும் தான் காயங்கள் குறித்து குறிப்பு எழுதுவார்கள் என்றும் அதை பொறுத்து தான் அ.சா.ஆ.4 ஐ தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல.